ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1960 - 2016 මාර්තු මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.03.24

*1960 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | விலைக் கட்டளைகள் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 236 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | – |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 237 | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 242 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 238 | | |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2016, ஏப்பிறல் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2016 இன் இல. 201*

எம்ஓடி /டிஈஎவ்/02/01/ஈஎன்எல்/09/யூஎன்ஐ.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்*

பின்வரும் பெயருடைய கெடெற் உத்தியோகத்தர்கள் 2015, சனவரி 23 ஆந்திகதி முதல் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையின் இரண்டாம் லெப்டினனட வரிசைப்பதவியில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அத்திகதி முதல் எந்திரிகள் சேவை அணிக்கு உள்ளிடுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் களிப்புடன் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

சி/58615 கெடெற் உத்தியோகத்தர் பிடுவல கங்கானம்கே ஹர்ஷக குமார அலஹகோன்
சி/ 58617 கெடெற் உத்தியோகத்தர் ஹித்தாதுர திலினி ஸ்ரீ மதுசிகா த சொய்சா

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆராச்சி,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2016, பெப்புருவரி 18.

3-568

---

*2016 இன் இல. 202*

எம்ஓடி /டிஈஎவ்/03/02/பீஆர்ஓ/ஆர்என்எப்/02/02.

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உறுதிப்படுத்தல்*

*2015, சனவரி மாதம் 18 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கமாண்டர் (ச) தரத்திற்கு :*

லெப்டினன்ட் (ச) [தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (ச)] குவன் கபுன்சர லீலாரத்ன, என்ஆர்எஸ் 2225, இகப

*2015, ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கமாண்டர் (வி) தரத்திற்கு :*

லெப்டினன்ட் (வி) [தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (வி)] நுவன் றங்கநாத் கருணாரத்ன, என்ஆர்எல் 1752, இகப

*2016, சனவரி மாதம் 19 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கமாண்டர் (இ) தரத்திற்கு :*

லெப்டினன்ட் (இ) [தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (இ)] மனமெல் தூர டிலான் அக்கலகங்க சுசிரிபால, என்ஆர்ஈ 2393, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆராச்சி,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2016, மாச்சு 01.

3-665

---

*2016 இன் இல. 203*

எம்ஓடி /டிஈஎவ்/03/02/பீஆர்ஓ/ஆர்என்எப்/01/07.

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உறுதிப்படுத்தல்*

*2016, சனவரி மாதம் 16 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கமாண்டர் (வி) தரத்திற்கு :*

லெப்டினன்ட் (வி) [தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (வி)] றங்சாகொடகே தோன் சஞ்ஜய அருனபிரிய, என்ஆர்எல்1820, இகப

*2016, சனவரி மாதம் 16 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கமாண்டர் (இ) தரத்திற்கு :*

லெப்டினன்ட் (இ) [தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (இ)] சுசந்த குணசேகர, என்ஆர்ஈ 1824, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆராச்சி,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2016, மாச்சு 01.

3-666

2016 இன் இல. 204

எம்ஓடி /டிஈஎவ்/03/02/பீஆர்ஓ/ஆர்என்எப்/01/07.

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
பதவி உயர்த்துதல்

2015, யூலை மாதம் 18 ஆந் திகதியிலிருந்து லெப்டினனட் கமாண்டர் (ச) தரத்திற்கு :

லெப்டினன்ட் (ச) சந்ரசெகர முதியன்சேலாகே தனுஸ்க அசெல சந்ரசெகர, என்ஆர்எஸ் 2268, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆராச்சி,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2016, மாச்சு 01.

3-663

---

2016 இன் இல. 205

எம்ஓடி /டிஈஎவ்/03/02/ஆர்என்எப்/சீஓஎம்.

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
அதிகாரியாக நியமித்தல்

2016, சனவரி மாதம் 08 ஆந் திகதியிலிருந்து லெப்டினனட் தரத்திற்கு:

1. லெப்டினனட் தலபிடி தேவகே மதுசங்க பியுமால்தல பிடிய, என்ஆர்எச் 3848, இகப
2. லெப்டினனட் வாசல முதியன்சேலாகே மேவன் சஸிந்த ஜயதிலக, என்ஆர்எச் 3849, இகப
3. லெப்டினனட் ஜயலத்துங்க பிரதீப் குமார ஜயலத், என்ஆர்எச் 3850, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆராச்சி,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2016, மாச்சு 01.

3-664

---

2016 இன் இல. 206

டி/ஆர்எப்/828/என்வை.

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
நிரந்தர கடற்படையில் குறுகிய கால அதிகாரவாணையில்
இருந்து நிரந்தர அதிகாரவாணைக்கு நியமித்தல்

2016, யூன் மாதம் 10 ஆந் திகதியிலிருந்து செயற்படும் படி கீழ் காணப்படும் பெயருடைய அதிகாரிக்கு இலங்கை கடற்படை நிரந்தர பிரிவில் அதிகாரியாக வழங்கப்பட்டது அதியுமத்தராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :

வைத்தியர் லெப்டினனட் ஹசித சவத் தேவபிரிய குடாஹெட்டி, என்ஆர்எம் 3081, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆராச்சி,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2016, மாச்சு 01.

3-708

---

# அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

2016 இன் இல. 207

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

திரு. சமன் குமார அத்தாவுதஹெட்டி அவர்கள், 2015, சனவரி மாதம் 10 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை பிரதம அமைச்சரின் அலுவலகத்தில் மேலதிகச் செயலாளர் (ஊடகம்) ஆக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

3-575/1

*2016 இன் இல. 208*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

இலங்கை நிர்வாக சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்த திரு. எல்.ஜே. எம். ஜீ. சி. பண்டார அவர்கள், 2015, திசெம்பர் மாதம் 16 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை அவருடைய நிரந்தரப் பதவிக்கான கடமைகளுடன் பதில் வனசீவராசிகள் பணிப்பாளர் அதிபதியாக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

3-575/2

*2016 இன் இல. 209*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

திருமதி சீ. எஸ். அபேசேக்கர அவர்கள், 2015, திசெம்பர் மாதம் 16 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை மூன்று (03) மாத காலத்திற்கு அல்லது உரிய பதவிக்கு பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்கும் வரைக்கும் இதில் எது முதலில் சம்பவிக்கின்றதோ அத்திகதி வரைக்கும் சட்ட ஆணைக்குழு திணைக்களத்தின் பதில் செயலாளராக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

3-575/3

# அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ 277/40

**(188 ஆம் அத்தியாயமான) தொல்பொருளியல் கட்டளைச் சட்டம்**

16 ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்

(188 ஆம் அத்தியாயமான) தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்படட தத்துவங்ககளின் பயனைக் கொண்டு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் நோக்கத்துக்காக இக்கட்டளைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட நினைவுச் சின்னங்களைப் "பண்டைய நினைவுச்சின்ன"ங்களாக இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

அகில விராஜ் காரியவசம்,
கல்வி அமைச்சர்.

2016, மாசி 16,
கொழும்பு.

***அட்டவணை***

**வெளிப்படுத்துகின்ற புராணச் சின்னங்களின் பட்டியல்**

1. தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், பஸ்கொட பிரதேச செயலகப் பிரிவில், ஊருபொக்க தெற்கு கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள ஊருபொக்க கிராமத்துக்குரிய இலன்தேசர் ஆட்சி அமைந்த கால கட்டத்தில் அமைக்கப்பட்ட புராணச் சுவர்.
2. தென் மாகாணத்தில், அம்பாந்தோட்டை மாவட்டத்தில், அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில், அம்பாந்தோட்டை கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள அம்பாந்தோட்டை நகரம் தெற்கு இலக்கம் 09 கிராமத்துக்குரிய டவர்ஹில் வீதியில் உள்ள மாவட்ட செயலக காணியிலுள்ள புராண கட்டிடம்.
3. தென் மாகாணத்தில், அம்பாந்தோட்டை மாவட்டத்தில், அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில், அம்பாந்தோட்டை கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள அம்பாந்தோட்டை நகரம் தெற்கு இலக்கம் 09 கிராமத்துக்குரிய டவர்ஹில் வீதியில் உள்ள புராண நீதிமன்ற கட்டிடம்.
4. தென் மாகாணத்தில், அம்பாந்தோட்டை மாவட்டத்தில், அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில், அம்பாந்தோட்டை கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள நகரம் மேற்கு இலக்கம் 09 கிராமத்தில் டவர்ஹில் வீதியில் உள்ள நீதவான் ஹொன்றிஜோன்ஸ்கவர் அவர்களின் மயான கோபுரம்.
5. தென் மாகாணத்தில், அம்பாந்தோட்டை மாவட்டத்தில், அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில், அம்பாந்தோட்டை கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள அம்பாந்தோட்டை நகரம் மேற்கு இலக்கம் 09 கிராமத்தில் டவர்ஹில் வீதியில் உள்ள வளிமண்டலியல் திணைக்கள பூமிக்கு அண்மித்த பூமியில் உள்ள புராணத்துக்கு மரம்.
6. தென் மாகாணத்தில், அம்பாந்தோட்டை மாவட்டத்தில், அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில், அம்பாந்தோட்டை கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள அம்பாந்தோட்டை நகரம் மேற்கு இலக்கம் 09 கிராமத்தில் டவர்ஹில் வீதியில் உள்ள அரசாங்க அதிபரின் உத்தியோக இல்லமாக பாவிக்கப்படும் பழைய கட்டிடம்.
7. தென் மாகாணத்தில், அம்பாந்தோட்டை மாவட்டத்தில், அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில், அம்பாந்தோட்டை கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள அம்பாந்தோட்டை நகரம் மேற்கு இலக்கம் 09 கிராமத்தில் டவர்ஹில் வீதியில் உள்ள மாடெலோ ஸ்தம்பம்
8. தென் மாகாணத்தில், அம்பாந்தோட்டை மாவட்டத்தில், அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில், அம்பாந்தோட்டை கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள அம்பாந்தோட்டை நகரம் மேற்கு இலக்கம் 09 கிராமத்தில் டவர்ஹில் வீதியில் உள்ள களங்கரை விளக்கம்.
9. தென் மாகாணத்தில், அம்பாந்தோட்டை மாவட்டத்தில், அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில், அம்பாந்தோட்டை கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள

அம்பாந்தோட்டை கிராமத்தில் கடற்பரை வீதியில் உள்ள சிறைச்சாலைக்குச் சொந்தமான புராணச் சுவர்.

10. தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், அக்மீமன பிரதேச செயலகப் பிரிவில், பட்டதூவ மேற்கு கிராம அலுவலர் பிரிவில், பட்டதூவ கிராமத்தில் உள்ள போரம்பவத்த அல்லது டெங்கியாவத்த எனும் குறிப்பிடும் காணியில் அமைந்துள்ள கற்களால் அமைந்த குளம்.

11. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகப் பிரிவில், வராதென்ன இலக்கம் 439 கிராம அலுவலர் பிரிவில், வராதென்ன கிராமத்தில் அமைந்துள்ள புராண கற்கிணறு (புராண அணைக்கட்டு).

12. மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், உக்குவளை பிரதேச செயலகப் பிரிவில், கொஹொபிலிவல கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள கொஹொபிலிவல கிராமத்தில் மாத்தளை வாரியபொலச்சந்தியில் உள்ள "மாத்தளை வாரியபொல புரட்சி"யை நினைவூட்டும் கற்களால் அமைக்கப்பட்ட ஞாபகார்த்த அறிவித்தல் பலகை.

13. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், குண்டசாலை பிரதேச செயலகப் பிரிவில், சிறிமல்வத்த தெற்கு கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள சிறிமல்வத்த அம்பலம்.

14. மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், முகத்துவாரம் பிரதேச செயலகப் பிரிவில், கொழும்பு 15' முகத்துவாரம் கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள மோதர அலுத்மாவத்தை, எலிஹவுஸ் இலக்கம் 521/3 எனும் இடத்தில் உள்ள புராண நீர்தாங்கி.

15. மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், பேருவளை பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 754 மரதான கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள மரதான கிராமத்துக்குரிய பேருவளை களங்கரை விளக்கம்

16. மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், பேருவளை பிரதேச செயலகப் பிரிவில்,குடாபயாகல கிராம அலுவலர் பிரிவில், குடாபயாலகல கிராமத்துக்குரிய பயாகல பொலிஸ் நிலையத்தில் உள்ள புராண கட்டிடம்.

17. ஊவா மாகாணத்தில், மொனறாகலை மாவட்டத்தில், புத்தல பிரதேச செயலகப் பிரிவில், மஹகொடயாய கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள ஹெலகம தேவகிரிய ஆராணிய சேனாசன பூமியில் அமைந்துள்ள கற்குகை தொகுதி, கட்டிடங்கள் மற்றும் தாது கோபுர சிதைவிடங்கள், உட்பட ஏனைய தொல்லியல் தடயங்கள்.

18. ஊவா மாகாணத்தில், மொனறாகலை மாவட்டத்தில், வெள்ளவாய பிரதேச செயலகப் பிரிவில், சிறிபுரகம 150/1 கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள திக்கலயாய கிராமத்துக்குரிய திக்கலயாய வாவி அண்மித்த பூமியில் உள்ள தாது கோபுர மேடுகள் கொண்ட சிதைவிடம்.

19. ஊவா மாகாணத்தில், மொனறாகலை மாவட்டத்தில், புத்தல பிரதேச செயலகப் பிரிவில், காமினிபுர கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள புதாமயாய கிராமத்துக்குரிய புதாமயாய வரலாற்றுமிக்க கற்களால் அமைக்கப்பட்ட உபகரணங்களை வைத்திருக்குமிடம்.

20. ஊவா மாகாணத்தில், மொனறாகலை மாவட்டத்தில், புத்தல பிரதேச செயலகப் பிரிவில், மஹகொடயாய கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள மஹகொடயாய ரஹதன் ககந்த, புத்தரக்கித ஆராணிய சேனாசனை பூமியில் உள்ள நீர்வடி வெட்டப்பட்ட கற்குகை.

21. ஊவா மாகாணத்தில், மொனறாகலை மாவட்டத்தில், வெள்ளவாய பிரதேச செயலகப் பிரிவில், சிறிபுரகம இலக்கம் 150/1 கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள திக்கலயாய கிராமத்தில் உள்ள தம்பேஆர வாவி அருகில், உள்ள (நிர்மாணிப்புக்கள் பாதியில் திருத்தப்பட்ட) புத்தரின் சிலை மற்றும் கற்தூண்கள் கொண்ட கட்டிட சிதைவிடம்.

22. ஊவா மாகாணத்தில், மொனறாகலை மாவட்டத்தில், புத்தல பிரதேச செயலகப் பிரிவில், தம்பேயாய கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள ஹெபெச்ஸ கிராமத்துக்குரிய ஹெபெக்ஸ வடக்கு கற்பாறை அண்மித்துள்ள நீர்வடி வெட்டப்பட்ட குகைகள், படிக்கட்டுக்கள், மற்றும் கற்ஆலையிடம்.

23. ஊவா மாகாணத்தில், மொனறாகலை மாவட்டத்தில், கதிர்காமம் பிரதேச செயலகப் பிரிவில், கோதமீகம கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள கோதமீகம நீர்வடி வெட்டப்பட்ட கற்குகை.

24. ஊவா மாகாணத்தில், மொனறாகலை மாவட்டத்தில், புத்தல பிரதேச செயலகப் பிரிவில், வெல்லச்சகம கிராமத்துக்குச் சொந்தமான ரஹதன்கந்த ஆராணிய சேனாசனை காணியில் உள்ள நீர்வடி மற்றும் கல்வெட்டுக்கள் கொண்ட அனைத்து குகைகளும் மற்றும் புராண தாதுகோபுரமும்.

25. ஊவா மாகாணத்தில், மொனறாகலை மாவட்டத்தில், வெள்ளவாய பிரதேச செயலகப் பிரிவில், எதிலிவெவ கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள எதிலிவெவயின் அணைக்கதவு.

26. ஊவா மாகாணத்தில், மொனறாகலை மாவட்டத்தில், மொனறாகலை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட யால தேசிய வனவளப் பூமியினுள் அமைந்துள்ள தாதுகோபுரம், கட்டிட சிதைவிடங்கள், நீர்வடி வெட்டப்பட்ட குகைகள், மற்றும் வரலாற்றுக்குரிய கல் உபகரணங்களை வைத்திருக்கும் இடம் கொண்ட வெஹெரதிவுலான தொல்பொருள் பூமி.

27. ஊவா மாகாணத்தில், மொனறாகலை மாவட்டத்தில், புத்தல பிரதேச செயலகப் பிரிவில், காமினிபுர கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள புதாமயாய கிராமத்துக்குரிய புதாமயாய எனும் குறிப்பிடப்படும் இடத்தில் உள்ள புராண கற் ஆலையிடம்.

28. ஊவா மாகாணத்தில், பதுளை மாவட்டத்தில், மஹியங்கனை பிரதேச செயலகப் பிரிவில், வெவ்கம்பஹா கிராம அலுவலர் பிரிவில், உள்ள சொரபொரவெவ கிராமத்துக்குரிய புராண வான்கதவு கொண்ட சொரபொரவெவ.

29. ஊவா மாகாணத்தில், பதுளை மாவட்டத்தில், ரிதீமாலியத்த பிரதேச செயலகப் பிரிவில், ரிதீமாலியத்த தெற்கு கிராம அலுவலர் பிரிவில், ரிதீமாலியத்த கிராமத்துக் குரிய போடேவ அம்பலம்.

30. ஊவா மாகாணத்தில், பதுளை மாவட்டத்தில், மஹியங்கனை பிரதேச செயலகப் பிரிவில், மஹியங்கனை கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள மாபாகடவெவ கிராமத்துக்குரிய புராண தாதுகோபுரமேடு மற்றும் கல் உபகரண சிதைவிடம் உட்பட ஏனைய தொல்பொருள் தடயங்கள் கொண்ட மாபாகொட தாதுகோபுர மேடு எனும் குறிப்பிடும் கற்பாறை.

31. ஊவா மாகாணத்தில், பதுளை மாவட்டத்தில், பண்டாரவளை பிரதேச செயலகப் பிரிவில், கஹத்தேவெல கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள கஹத்தேவெல புராண அம்பலம்.

32. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், ஒட்டிசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில், கரம்பகாடு சமனன்குளம் கிராமத்துக்குரிய கற்தூண் கொண்ட கட்டிட சிதைவிடம்.

33. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில் முஹுுதுபடபத்துவ பிரதேச செயலகப் பிரிவில், முல்லைத்தீவு நகரம் கிராம அலுவலர் பிரிவில், உள்ள முல்லைத்தீவு ஒல்லாந்தர் கோட்டை.

34. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், ஒட்டிசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில், புளுமச்சினாதகுளம் கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள புளுமச்சினாதகுளம் கிராமத்துக்குரிய தாதுகோபுரம் மற்றும் கட்டிட சிதைவுகள் கூடிய பாதுகாக்கப்பட்ட வாவி வன தொகுதி.

35. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில், குளாமுறிப்பு கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள குளாமுறிப்பு கட்டிட சிதைவிடம் மற்றும் தாது கோபுரமேடுகள்.

36. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில், முத்துரியன்கட்டுக்குளம் கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள முத்தியன்கட்டு கிராமத்துக்குரிய முத்தியன்கட்டு வாவி அருகிலுள்ள கட்டிட சிதைவிடம்.

37. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், முல்லைத்தீவு பிரதேச செயலகப் பிரிவில், தட்டுவான் கிராம அலுவலர் பிரிவில், தன்டமலை கிராமத்துக்குரிய தன்டமலை சிதைவிடம் எனும் குறிப்பிடத்தில் உள்ள கட்டிட சிதைவிடம்.

38. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில், தன்டுலன் கிராம அலுவலர் பிரிவில் இத்தமடுவ கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள இத்தமடுவ கிராமத்துக்குரிய இத்தமடுவ எனும் குறிப்பிடும் கற்தூண்கள் கொண்ட கட்டிட சிதைவிடம்.

39. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில், தட்டயாமலை கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள தட்டயாமலை கிராமத்துக்குரிய சிதைவிடமான தாதுகோபுரம் மற்றும் கட்டிட சிதைவுகள் கூடிய இரண்டு கற்பாறை (தட்டயாமலை சிதைவிடம்)

40. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில், கணேஷபுரம் கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள கனேஷபுரம் கற்தூண் மற்றும் கற்பாதம் கூடிய கட்டிட சிதைவிடம்.

41. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில், வெள்ளங்குளம் கிராமத்துக்குரிய ஆராம தொகுதியைச் சேர்ந்த வெள்ளாங்குளம் சிதைவிடம்.

42. வட மாகாணத்தில், மன்னார் மாவட்டத்தில், மன்தாய் -தெற்கு பிரதேச செயலகப் பிரிவில், இலுப்பகடவாய் 04 கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள இலுப்பகடவாய் கிராமத்துக்குரிய இலுப்பகடவாய் படவுதுரை அளவுத்தூண்.

43. வட மாகாணத்தில், மன்னார் மாவட்டத்தில், தலைமன்னார் பிரதேச செயலகப் பிரிவில், ஓல்டிபியர் கிராமத்துக்குரிய தலைமன்னார் புராண அணைக்கட்டு.

44. வட மாகாணத்தில், மன்னார் மாவட்டத்தில், மன்னார் பிரதேச செயலகப் பிரிவில், ஊருமலை 49 - தெற்கு கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள ஊருமலை கிராமத்துக்குரிய ஊருமலை களங்கரை விளக்கம்.

45. வட மாகாணத்தில், கிளிநொச்சி மாவட்டத்தில், புனரீன் பிரதேச செயலகப் பிரிவில், கௌதார்முனை KN 68 கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள கல்முனை கிராமத்துக்குரிய புராண அளவுத்தூண்.

46. வட மாகாணத்தில், கிளிநொச்சி மாவட்டத்தில், கராச்சி பிரதேச செயலகப் பிரிவில், உட்டுபுலம் கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள உட்டுபுலம் கிராமத்துக்குரிய சிதைவிடமான தாதுகோபுர மேடுகள், கட்டிடங்கள் மற்றும் புராணக்கிணறு உட்பட உடடுபுலம் சிதைவிடம்.

47. வட மாகாணத்தில், கிளிநொச்சி மாவட்டத்தில், புனரீன் பிரதேச செயலகப் பிரிவில், பல்லிக்குடா இலக்கம் 65 கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள அரிசபுரம் கிராமத்துக்குரிய அல்லிராணி கோட்டை எனும் குறிப்பிடும் இடத்திலுள்ள சிதைவிட மேடுகள்.

48. வட மாகாணத்தில், கிளிநொச்சி மாவட்டத்தில், கராச்சி பிரதேச செயலகப் பிரிவில், அக்கராயன் இலக்கம் 5 கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள அக்கராயன் கிராமத்துக்குரிய சிதைவிட மேடுகள்.

49. வட மாகாணத்தில், கிளிநொச்சி மாவட்டத்தில், கராச்சி பிரதேச செயலகப் பிரிவில், சிவநகர் இலக்கம் 35 கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள சிவநகர் கிராமத்துக்குரிய சிவநகர் கோவில் பூமியிலுள்ள தாதுகோபுர மேடுகள் மற்றும் சிதைவிடமான கட்டிடங்கள்.

50. வட மாகாணத்தில், கிளிநொச்சி மாவட்டத்தில், புனரீன் பிரதேச செயலகப் பிரிவில், மட்டுவில்நாடு தெற்கு இலக்கம் 35 கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள புனரீன் நகரம் கிராமத்துக்குரிய இலந்தேசர் கோட்டை.

51. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், மல்லாவி பிரதேச செயலகப் பிரிவில், ஆலங்குளம் கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள ஆலங்குளும் கிராமத்துக்குரிய ஆலங்குளம் தாதுகோபுர சிதைவிடம் (65 ஆவது இராணுவ படையணி தலைமையகம் அருகில்)

52. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில், கல்விளான் கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள கல்விளான் கிராமத்துக்குரிய கற்தூண்கள் கொண்ட சிதைவிடம்.

53. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், ஒட்டிசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில், சத்யாடம்பன் கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள அம்பகாமம் கிராமத்துக்குரிய உதியகுருப்புளம் வாவி அருகிலுள்ள ஆராம தொகுதிக்குரிய சிதைவிடங்கள்.

54. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவில், மன்னகன்டால் கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள மன்னகன்டால் கிராமத்துக்குரிய கண்ணியார் கோவில் சிதைவிடம் என்னுமிடத்திலுள்ள தாதுகோபுர மேடுகள், கற்தூண்கள் மற்றும் கட்டிட சிதைவிடம் கொண்ட பௌத்த ஆராம தொகுதி சிதைவிடம்.

55. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், முஹுதுபடபத்துவ பிரதேச செயலகப் பிரிவில், கொமளமுனை மத்திய கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள நைத்திக்காய்குளம் கிராமத்துக்குரிய நைத்திக்காய்குளம் தாதுகோபுர மேடுகள் கொண்ட சிதைவிடம்.

56. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், வெளிஓயா பிரதேச செயலகப் பிரிவில், ஜனகபுர-05 கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள ஜனகபுர புதிய பாடசாலை பின்புறம் அமைந்துள்ள கற்தூண்கள் கொண்ட கட்டிட சிதைவிடம்.

57. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், ஒட்டிசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில், முத்தியங்கட்டுவ கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள முத்தியங்கட்டுவ இராணுவ பயிற்சி பாடசாலை அருகிலுள்ள புராண தாதுகோபுரம், சிற்பகம் மற்றும் ஏனைய கட்டிட விதைவிடங்கள்.

58. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், முஹுதுபடபத்துவ பிரதேச செயலகப் பிரிவில், கிரியிப்பன்வெவ கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள கிரியிப்பன்வெவ கிராமத்துக்குரிய நயாரு புராண தாதுகோபுரம்.

59. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், ஒட்டிசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில், கச்சிலாமடு கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள கச்சிலாமடு கிராமத்துக்குரிய பன்டாரவன்னியன் ஸ்தம்பம்.

60. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில், புத்துவெட்டுவான் கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள புத்துவெட்டுவான் கிராமத்துக்குரிய கற்தூண்கள் கொண்ட மருதகுளம் சிதைவிடம்.

61. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 85 நாகபாதம் கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள புத்துவெட்டுவான் கிராமத்துக்குரிய கட்டிட சிதைவுகள் கொண்ட புத்துவெட்டுவான் சிதைவிடம்.

62. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 85 நாகபாதம் கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள பளைமுருகண்டி கிராமத்துக்குரிய கட்டிட சிதைவுகள் கொண்ட அம்பலாவிகுளம் சிதைவிடம்.

63. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 36 நாகபாதம் கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள பளைமுருகண்டி கிராமத்துக்குரிய கட்டிட சிதைவுகள் கொண்ட அம்பலாவிகுளம் சிதைவிடம்.

64. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 32 தென்னியங்குளம் கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள தென்னியங்குளம் கிராமத்துக்குரிய கட்டிட சிதைவுகள் கொண்ட தென்னியங்குளம் சிதைவிடம்.

65. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 18 உளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள நீராவி கிராமத்துக்குரிய தாதுகோபுரங்கள், கட்டிட சிதைவுகள், கொண்ட நீராவி உளியங்குளம் சிதைவிடம்.

66. வட மாகாணத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில், துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில், கொட்டியார்கட்டிகுளம் கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள உளியங்குளம் கிராமத்துக்குரிய அம்பளபெருமாள் வாவி அருகிலுள்ள கட்டிட சிதைவிடம்.

67. வடமத்திய மாகாணத்தில், அநுராதபுரம் மாவட்டத்தில், கஹட்டகச்கிகிலிய பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 215 திவுல்வெவ பம்பரஹெல துலான கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ள பம்பரஹெல தேவகிரி ரஜமஹவிகாரை பூமியிலுள்ள நீர்வடிவெட்டுக்கள் மற்றும் கல்வெட்டுக்கள் கூடிய கற்குகை தொகுதிகள் அமைந்துள்ள பம்பரஹெல மலை விஹாரை காணியிலுள்ள தாதுகோபுர மேடுகள் மற்றும் ஏனைய தொல்பொருள் தடயங்கள்.

3 - 618

---

## காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 120) கீழான அறிவித்தல்

கீழ்க்குறிப்பிட்ட அட்டவணையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் அடுக்குமாடி ஆதனம் I ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின்கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2016.04.01 ஆந் திகதி தொடக்கம் 2016.04.15 ஆந் திகதிவரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு அநுராதபுரம் காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமான பதிவு சம்பந்தமாக ஹோமாகம எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்துமூலம் 2016.04.22 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

### அட்டவணை

| நிரல் I<br>பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகளின் விபரங்கள் | நிரல் II<br>காணியின் விபரங்கள் | நிரல் III<br>பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரங்கள் |
|---|---|---|
| கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம காணிப் பதிவகத்தின் G பிரிவின் 596 ஆவது புத்தகத்தின் 297 ஆவது ஏடு. | மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் பல்லேபற்று ஹேவாகம் கோறளையில் கொஸ்வத்த வீதி, கலபலுவாவ இல் அமைந்துள்ள "தெல்கஹவத்த தெல்கஹ குருந்து வத்த" என்னும் இடத்தில் உத்தரவுபெற்ற அளவீட்டாளர் திரு. பீ. பீலிக்ஸ் டயஸ் அவர்களினால் 1991.12.04 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 389 ஆம் அளவீட்டின் லொட் "A1" இற்கான எல்லைகள் :-<br>வடகிழக்கு : லொட் 7 (10 அடி அகலப் பாதை);<br>தென்கிழக்கு : லொட் A 2;<br>தென்தெற்கு : டேவிட் ஏ. பெரேராவிற்கு சொந்தமான காணி மற்றும் பாதை ;<br>வடமேற்கு : இல. 310, அளவீட்டின் பிரகாரம் லொட் சீ4.<br>விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 12.89பே. | 1. சீ. ஜே. த சில்வா அமரதுங்க பி.நொ. ஆல் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 1991.12.09 ஆந் திகதிய 2466 ஆம் இலக்கமுடைய அறுதி உறுதி. |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எமது இல. : ஆர்ஜீ/என்பீ/11/2/07/2016/ஏடு. தயா.
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

3-604

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்களினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(காலி கிளை) -திருவாளர்கள் உப்புலி பிரின்ரர்ஸ் (பீவீரீ) லிமிட்டெட்

*2016.01.27* ஆந் திகதியன்று நடைபெற்ற பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ.க. இன் பணிப்பாளர் சபை கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது :-

''கடப்பாடுடையவரான/ஈடுவைத்தவரான திருவாளர்கள் உப்புலி பிரின்ரர்ஸ் (பீவீரீ) லிமிட்டெட் மற்றும் ஈடுவைத்தவரான புவக் தண்டாவே லொக்குஆரச்சிகே சோமபால (ஒப்ளிகோ கம்பனியின் பணிப்பாளர்) ஆகியோர், பதிவு இல. பீகியூ. 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் சார்பில் காலியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ.எம். எஸ். மரிக்கார் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2010, சனவரி 15 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 11095 மற்றும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். ஆர். ஹேவதந்திரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2010, யூலை 07 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 1965 ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதாதலாலும்,

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. (இதனகத்துப் பின்னர் சில வேளைகளில் ''வங்கி'''' என அழைக்கப்படும்) இற்கு சொல்லப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கறள் 11095 மற்றும் 1965 ஆகியவற்றின் மூலம் 2015, திசெம்பர் 07 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை நான்கு கோடியே நாற்பது இலட்சம் ரூபா (ரூ. 4,40,00,000) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு பதின்நான்கு சதவீத (14%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது நான்கு கோடியே அறுபத்தாறு இலட்சத்து இருபதாயிரத்து எழு நூற்று பன்னிரண்டு ரூபா முப்பத்திரண்டு சதம் (ரூ. 4,66,20,712.32) கொண்ட தொகை மற்றும் 2015, திசெம்பர் 06 ஆந் திகதிவரையான வட்டியும் தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும்,

சொல்லப்பட்ட முறி இலக்கங்கள் 11095 மற்றும் 1965 ஆகியவற்றின் மீது வரவேண்டிய சொல்லப்பட்ட தொகை நான்கு கோடியே அறுபத்தாறு இலட்சத்து இருபதாயிரத்து எழுநூறறு பன்னிரண்டு ரூபா முப்பத்திரண்டு சதம் (ரூ. 4,66,20,712.32) ஐ, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை வட்டியுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், கொலன்னாவை, விஹார மாவத்தை, இல. 182/3 (50/3) ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் துசித்த கருணாரத்ன அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கிறதென இத்தால் தீர்மானிக்கின்றது.''.

### அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், காலி நான்கு கிறவட்சுக்கள் மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள் தங்கெதரவில் அமைந்துள்ளதும் கிரிப்ஸ் வீதி, வரிமதிப்பு இல. 47 ஐக் கொண்டதும் ''மொல்லேகெதர வத்தை'' என்ற ''தொலமுல்லேவத்தை'' என்ற ''கல்வெட்டியேவத்தை'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எஸ்.ஏ. பீபீ அவர்களால் தயாரிக்கப்பட்டு 1958, செத்தெம்பர் 20 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1468 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1சீ என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள ''குசுமலா'' என அழைக்கப்படும் வீடு மற்றும் வளவுகளுடன் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 1சீ இன் எல்லைகளாவன - வடக்கு: தல்கஹவத்தை ; கிழக்கு : இதே காணியின் துண்டு 1பி மற்றும் துண்டு 1ஈ ; தெற்கு: கிறிப்ஸ் வீதி ; மேற்கு: இதே காணியின் துண்டுகள் 1டி4 மற்றும்1 டி1.இது, இரண்டு றூட் முப்பத்தைந்து தசம் ஐந்து சைபர் பேர்ச். (0ஏ. 2றூ. 35.50பே) விஸ்தீரணமுடையது. காலி காணிப் பதிவகத்தில் தலைப்பு ஏ 664/224 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அண்மைய நிலஅளவிற்கமைய வரைபடம் இல. 1468 இல் துண்டு 1சீ பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது :-

தென் மாகாணம், காலி மாவட்டம், காலி நான்கு கிறவட்சுக்கள் மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள் தங்கெதரவில் அமைந்துள்ளதும் கிரிப்ஸ் வீதி, வரிமதிப்பு இல. 47 ஐக் கொண்டதும் ''மொல்லேகெதரவத்தை'' என்ற ''தொலமுல்லேவத்தை'' என்ற ''கல்வெட்டியேவத்தை'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. என். விக்ரமசேக்கர அவர்களால் தயாரிக்கப்பட்டு 2000, பெப்புருவரி 24 ஆந் திகதி திகதியிடப்பட்ட வரைபடம் இல. 674 இல் குறிப்பிடப்பட்டு துண்டு ஏ என அடையாள மிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள ''குசுமலா'' என அழைக்கப்படும் வீடு மற்றும் வளவுகளுடன் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு ஏ இன் எல்லைகளாவன - வடக்கு: தல்கஹவத்தை ; கிழக்கு : துண்டு 1பி மற்றும் வீதி ; தெற்கு: கிறிப்ஸ் வீதி ; மேற்கு: துண்டுகள் 1டி1 மற்றும் 1டி4 மற்றும் ஹாகொட ராலலாகே வத்தை. இது, இரண்டு றூட் இருபத்தேழு தசம் ஐந்து சைபர் பேர்ச். (0ஏ. 2றூ. 27.50பே) விஸ்தீரணமுடையது.

வழியின் மீதும் வழியேயுமான உரிமையுடன் சேர்த்து–

தென் மாகாணம், காலி மாவட்டம், காலி நான்கு கிறவட்சுக்கள் மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள் தங்கெதரவில் அமைந்துள்ளதும் ''மொல்லேகெதரவத்தை'' என்ற ''தொலமுல்லே வத்தை'' என்ற ''கல்வெட்டியேவத்தை'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ்.ஏ. பீபீ அவர்களால் தயாரிக்கப்பட்டு 1958, செத்தெம்பர் 20 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1468 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1ஈ என அடையாளமிடப் பட்டது மான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். சொல்லப் பட்ட துண்டு 1ஈ இன் எல்லைகளாவன – வடக்கு மற்றும் வடகிழக்கு : இதே காணியின் துண்டு 1பி ; கிழக்கு: இதே காணியின் துண்டு 1ஏ ; தெற்கு: கிறிப்ஸ் வீதி ; மேற்கு: இது காணியின் துண்டுகள் 1சீ. இது எட்டு பேர்ச். (0ஏ. 0றூ. 8பே) விஸ்தீரணமுடையது. காலி காணிப் பதிவகத்தில் தலைப்பு ஏ 561/108 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. தென் மாகாணம், காலி மாவட்டம், காலி நான்கு கிறவட்சுக்கள் மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள் மிலித்துாவவில் அமைந்துள்ளதும் ''தெல்கஹதுவேவத்தை'' என்ற ''தெல்கஹவத்தை

இன் நிர்ணயிக்கப்பட்ட துண்டு இல. 1'' என அழைக்கப்படும் காணியின்கண் அமைந்துள்ளஅதனுடன் தொடர்புபட்ட எல்லா வற்றுடனும் சேர்த்து. மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் முழுவதும். சொல்லப்பட்ட துண்டு இல. 1 இன் எல்லைகளாவன - வடக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஐ. டீ. எஸ். செனெவிரட்ன அவர்களால் தயாரிக்கப்பட்டு1964.06.04 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 662 இல் துண்டு இல. 3 மற்றும் மஹவத்தைஓவிட்ட; கிழக்கு : பெரு வீதி; தெற்கு : மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 662 இல் துண்டு இல. 7 என அடையாளமிடப்பட்ட வீதிக்கான ஒதுக்கு ; மேற்கு : இது, காணியின் துண்டு இல. 11. இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். விசுப்பெரும அவர்களால் தயாரிக்கப்பட்டு 1970.06.20 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 400 இற்கமைய முப்பது பேர்ச். (0ஏ. 0றூ. 30பே) விஸ்தீரணமுடையது. காலி காணிப்பதிவகத்தில் தலைப்பு ஏ 358/ 37 மற்றும் 681/ 85 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

சொல்லப்பட்ட துண்டு இல. 1, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஆர். வீரசூரிய அவர்களால் தயாரிக்கப்பட்டு 2008.08.02 ஆந் திகதியிடப்பட்ட மிக அண்மைய வரைபடம் இல.2303 இல் பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது.

தென் மாகாணம், காலி மாவட்டம், காலி நான்கு கிறவட்சுக்கள் மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள் மிலித்தூவவில் அமைந்துள்ளதும் ''தெல்கஹதுவேவத்தை'' என்ற ''தெல்கஹவத்தை இன் நிர்ணயிக்கப்பட்ட துண்டு இல. 1'' (உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். விசுப்பெரும அவர்களால் தயாரிக்கப்பட்டு 1970.06.20 ஆந் திகதியிடப்பட்ட் வரைபடம் இல. 400 இல் குறிப்பிடப்பட்ட துண்டு இல. 1 இன் மீள்நில அளவையாக இருக்கின்ற) என அழைக்கப்படும் காணியின்கண் அமைந்துள்ள மற்றும் அதனுடன் தொடர்புபட்ட எல்லாவற்றுடனும் மற்றும் மொறிஸ் வீதி, மாநகர வரிமதிப்பு இல. 73 ஐக்கொண்ட கட்டிடத்துடன் சேர்த்து. மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் முழுவதும். சொல்லப்பட்ட துண்டு இல. 1 இன் எல்லைகளாவன - வடகிழக்கு : வரைபடம் இல.662இல் துண்டுஇல.3 மற்றும் மஹவத்தை ஓவிட்ட ; தென்கிழக்கு: காலியிலிருந்து லபுதூவ வரையான பெரு வீதி; தென்மேற்கு: வரைபடம் இல. 662 இல. 7 என அடையாளமிடப்பட்ட வீதி ; மேற்கு: வீதி ; வடமேற்கு: இதே காணியின் துண்டு இல. 11. இது, முப்பது பேர்ச். (0ஏ. 0றூ. 30பே) அல்லது 0.07588 ஹெக்டயார் விஸ்தீரணமுடையது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இரன்த் ரொட்ரிகோ,
முகாமையாளர் - அறவீடுகள்

3-713

---

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்களினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.*

(கொள்ளுப்பிட்டி கிளை) -கருடாஇன்வெஸ்ட்மெண்ட் (பிறைவேட்) லிமிட்டெட்

2016.01.27 ஆந் திகதியன்று நடைபெற்ற பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ.க. இன் பணிப்பாளர் சபை கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது :-

''கடப்பாடுடையவரான கருடா இன்வெஸ்ட்மெண்ட் (பிறைவேட்) லிமிட்டெட் பதிவு இல. பீகியூ. 48 ஐக்கொண்ட பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு பீ. எஸ். என். ராஜகருணா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2014, யூலை 03 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 5307 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதாதலாலும்,

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. (இதனகத்துப் பின்னர் சில வேளைகளில் ''வங்கி'' என அழைக்கப்படும்) இற்கு சொல்லப்பட்ட முறிமூலம் 2015.10.16 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை ஒரு கோடியே நான்கு இலட்சத்து பதினோராயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று நான்கு ரூபா அறுபத்தேழு சதம் (ரூ. 1,04,11,894.67) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு பதினாறு தசம் ஐந்து சதவீத (16.5%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது ஒரு கோடியே ஐந்து இலட்சத்து அறுபத்திரண்டாயிரத்து எழுநூற்று நாற்பது ரூபா இருபத்தாறு சதம் (ரூ. 1,05,62,740.26) கொண்ட தொகை மற்றும் 2015.10.15 ஆந் திகதி வரையான வட்டியும் 2015.10.16 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை ஒரு கோடியே முப்பத்தொன்பது இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து தொளாயிரத்து பன்னிரண்டு ரூபா பதினெட்டு சதம் (ரூ. 1,39,64,912.18) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு பதினாறு தசம் ஐந்து சதவீத (16.5%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது ஒரு கோடியே நாற்பத்தொரு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து தொளாயிரத்து இருபத்தைந்து ரூபா பதினைந்து சதம் (ரூ. 1,41,66,925.15) கொண்ட தொகை மற்றும் 2015.10.15 ஆந் திகதி வரையான வட்டியும் தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும்,

சொல்லப்பட்ட முறி மீது வரவேண்டிய சொல்லப்பட்ட தொகை இரண்டு கோடியே நாற்பத்தேழு இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து அறுநூற்று அறுபத்தைந்து ரூபா நாற்பத்தொரு சதம் (ரூ. 2,47,29,665.41) ஐ, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை வட்டியுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள ஈட்டு முறி இல. 5307 இனால் கருடா இன்வெஷ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், கொலன்னாவை, விஹார மாவத்தை, இல. 182/3 (50/3) ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் துசித்த கருணாரத்ன அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கிறதென இத்தால் தீர்மானிக்கின்றது.''.

**அட்டவணை**

தென்மாகாணம், காலி மாவட்டம், (காலி பதிவுப் பிரிவிற்குள்) தல்பே பற்று அக்மீமன பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுக்குள், 133பி - யட்டகமை கிராம அலுவலர் பிரிவினுள், யட்டகமை கிராமத்தில அமைந்துள்ளதும் ''சுசீமா எஸ்டேட்'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ. ஜீ. உபசேன அவர்களால் தயாரிக்கப்பட்டு 2013, மே 08 வரைபடம் இலக்கம்

*1178ஏ இல் குறிப்பிடப்பட்டு துண்டு ஏ (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஜீ. ஜே. டீ. சில்வா அவர்களால் தயாரிக்கப்பட்டு 2003.09.06 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 44/2003 இல் குறிப்பிடப்பட்ட தொடர் நிர்ணயிக்கப்பட்ட துண்டு டீஏ இன் ஒரு ஒன்றிணைப்பாகவும் ஒரு உப பிரிவாகவும் மீள் நிலஅளவையாகவும் இருக்கின்ற) என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும், அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து சொல்லப்பட்ட துண்டுஏ இன் எல்லைகளாவன - வடக்கு: வரைபடம்இல.914 துண்டு 2 ; கிழக்கு: இதேகாணியின் பாகம் மற்றும் வரைபடம் இல. 1178ஏ இல் துண்டு பி ; தெற்கு: கடொலான மற்றும் ஓடை; மேற்கு : கிராம சபை வீதி (பிரதான வீதியிலிருந்து வீடுகளுக்கு). இது, மேற்சொல்லப்பட்ட வரைபடம் இல. 1178ஏ இற்கமைய இரண்டு ஏக்கர் மூன்று றூட் (2ஏ. 3றூ. 0பே) விஸ்தீரணமுடையது. காலி காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஜே 51/60 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இரன்த் ரொட்ரிகோ,
முகாமையாளர் - அறவீடுகள்

*3-714*

---

## டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, டீ. எவ். சீ. சீ. வங்கி பிஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2015, பெப்பருவரி 03 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*''விக்மன் என்டபிறைசஸ்" என்ற பெயர்மகுடத்தின் கீழும்குழுமத்தின் கீழ் தொழில் கொண்டு நடாத்துகின்ற திருகோணமலையைச் சேர்ந்த சண்முகம் விக்னேஷ்வரன் என்பவர், டீ. எவ். சீ. சீ. வங்கி பீ.எல். சீ. சார்பில் திருகோணமலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திலகரட்ணம் துஷ்யந்தன் என்பவரினால் எல்லாம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011, சனவரி 13 ஆந் திகதிய 843 ஆம் இலக்க ஈட்டு முறி மீதும் 2012, மாச்சு 30 ஆந் திகதிய 1516 ஆம் இலக்க ஈட்டுமுறி மீதும் 2012, ஓகத்து 21 ஆந் திகதிய 1747 ஆம் இலக்க ஈட்டுமுறி மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளை செலுத்துவதில் தவணை தவறியுள்ளதலாலும்,*

*2015, மாச்சு 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஒரு கோடியே முப்பத்தொரு இலட்சத்து எழுபத்தாறாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு ரூபா பதின்நான்கு சதம் (ரூ. 1,31,76,666.14) கொண்ட தொகையும், 2015, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஐம்பத்தாறு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து தொளாயிரத்து எழுபத்து எட்டு (ரூ. 56,99,978) கொண்ட தொகைமீது மீளாய்வுத் தேதியன்று நிலவுகின்ற பின்வரும் அடிப்படை வீதங்களுள்உயர்வான வீதத்தின் மீது கணக்கிடப்பட்ட வட்டிவீதமும் ஆண்டொன்றுக்கு எட்டு தசம் ஐந்து சதவீத (8.5%) விளிம்பும், அதாவது -*

*(அ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட சராசரி எடைவீதமளிக் கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதம் (சஎபிவீ) ; அல்லது*

*(ஆ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரியின் தேறிய சராசரி 91 நாள் திறைசேரி உண்டியல் வீதம்.*

*சொல்லப்பட்ட வீதம் ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும்;*

*இருபத்தைந்துஇலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து இருநூற்று தொண்ணூற்று இரண்டு ரூபா (ரூ. 25,68,292) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஒன்பது சதவீத (9%) வட்டியையும், முப்பத்தைந்து இலட்சம் ரூபா (ரூ. 35,00,000) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஆண்டொன்றுக்கு எட்டு தசம் ஏழு சதவீத (8.7%) வட்டியையும்; சொல்லப்பட்ட வீதம் ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் சொல்லப்பட்ட சண்முகம் விக்னேஸ்வரன் என்பவரிடமிருந்து டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,*

*டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அவர்களுக் குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 843 ஆம், 1516 ஆம் மற்றும் 1747 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் பொருத்தணைகளுக்கிணங்க டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீயினால் உறப்பட்ட, ஒரு கோடியே முப்பத்தொரு இலட்சத்து எழுபத்தாறாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு ரூபா பதின்நான்கு சதம் (ரூ. 1,31,76,666.14) கொண்ட தொகையையும், 2015, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஐம்பத்தாறு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து தொளாயிரத்து எழுபத்து எட்டு (ரூ. 56,99,978) கொண்ட தொகைமீது மீளாய்வுத் தேதியன்று நிலவுகின்ற பின்வரும் அடிப்படை வீதங்களுள் உயர்வான வீதத்தின் மீது கணக்கிடப்பட்ட வட்டிவீதமும் ஆண்டொன்றுக்கு எட்டு தசம் ஐந்து சதவீத (8.5%) விளிம்பும், அதாவது -*

*(அ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட சராசரி எடைவீதமளிக் கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதம் (சஎபிவீ) ; அல்லது*

(ஆ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரியின் தேறிய சராசரி 91 நாள் திறைசேரி உண்டியல் வீதம்.

சொல்லப்பட்ட வீதம் ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும்; அத்துடன்

இருபத்தைந்துஇலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து இருநூற்று தொண்ணூற்று இரண்டு ரூபா (ரூ. 25,68,292) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஒன்பது சதவீத (9%) வட்டியையும், முப்பத்தைந்து இலட்சம் ரூபா (ரூ. 35,00,000) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஆண்டொன்றுக்கு எட்டு தசம் ஏழு சதவீத (8.7%) வட்டியையும்; சொல்லப்பட்ட வீதம் ஒவ்வொரு மாதத்தினதும முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் கீழே விபரிக்கப்படும் காணிகளையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுத்தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள், என்பவற்றோடு சேர்த்து அறவிடுவதற்காக மேற்கூறப்பட்ட ஈட்டு முறிகள் மூலம் சண்முகம் விக்னேஸ்வரன் என்பவரினால் டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**843,1516 மற்றும் 1747 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், திருகோணமலைப் பட்டினம் மற்றும் எல்லைகளின் பி. செ. பிரிவில் திருகோணமலை நகர சபை எல்லைகளினுள் "பெருந்தெரு" 7 ஆம் இலக்க வட்டாரத்தில் அமைந்துள்ளதும் திருகோணமலை பிரதான வீதியில் 323, 323/1, 323/2, 323/3, 325, 327, 327/1, 327/2 மற்றும் 327/3 ஆம் வரிமதிப்பீட்டிலக்கங்களைக் கொண்டதும் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. மகேந்திரநாதன் என்பவரினால் வரையப்பட்ட 2008.06.15 ஆந் திகதிய 1866ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் A எனவடையாளமிடப்பட்டதுமான காணித்துண்டு ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : கே. சண்முகத்தின் மரபுரிமையாளர்களினால் உரிமை கோரப்பட்ட ஆதனமும் பிரதான வீதியும் ; கிழக்கு : பிரதான வீதியும் டாக்டர் தம்பியையாவின் மரபுரிமையாளர்களினால் உரிமை கோரப்பட்ட ஆதனமும் ; தெற்கு : டாக்டர் தம்பியையாவின் மரபுரிமையாளர்களினாலும் வரதகுமாரினாலும் உரிமை கோரப்பட்ட ஆதனம் மற்றும் ; மேற்கு : வரதகுமாரினாலும் சண்முகத்தின் மரபுரிமையாளர்களினாலும் உரிமை கோரப்பட்ட ஆதனம் ; பரப்பளவில் இருபத்துமூன்று தசம்மூன்று எட்டுப் பேர்ச் (0ஏ. 0றூ. 23.38பே.) அதனோடு தொடர்புபட்ட எல்லா உரிமைகளுடனும் சேர்த்து.

மேற்கூறப்பட்ட காணி கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், திருகோணமலைப் பட்டினம் மற்றும் எல்லைகளின் பி. செ. பிரிவில் திருகோணமலை நகர சபை எல்லைகளினுள் "பெருந்தெரு" 7 ஆம் இலக்க வட்டாரத்தில் அமைந்துள்ளதும் திருகோணமலை பிரதான வீதியில் 323, 323/1, 323/2, 323/3, 325, 327, 327/1, 327/2 மற்றும் 327/3 ஆம் வரிமதிப்பீட்டிலக்கங்களைக் கொண்டதும் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. மகேந்திரநாதன் என்பவரினால் மீள் நில அளவையிடப்பட்டு அவரினால் வரையப்பட்ட 2012.03.25 ஆந் திகதிய 1866A ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் A எனக்குறித்துக்காட்டப்பட்டது. அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : கே. சண்முகத்தின் மரபுரிமையாளர்களினால் உரிமை கோரப்பட்ட ஆதனமும் பிரதான வீதியும் ; கிழக்கு : பிரதான வீதியும் டாக்டர் தம்பியையாவின் மரபுரிமையாளர்களினால் உரிமை கோரப்பட்ட ஆதனமும் ; தெற்கு : டாக்டர் தம்பியையாவின் மரபுரிமையாளர் களினாலும் வரதகுமாரினாலும் உரிமை கோரப்பட்ட ஆதனம் மற்றும் ; மேற்கு : வரதகுமாரினாலும் சண்முகத்தின் மரபுரிமையாளர்களினாலும் உரிமை கோரப்பட்ட ஆதனம் ; பரப்பளவில் இருபத்துமூன்று தசம்மூன்று எட்டுப் பேர்ச் (0ஏ. 0றூ. 23.38பே.) வளவுகளுடனும் அதன்மீதுள்ள வேறெல்லாவற்றுடனும் சேர்த்து ; திருகோணமலை மாவட்டக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஏ. ஆர். பிரனாந்து,
பொது முகாமையாளர்.

டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீ,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 9.

3-601

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.